1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124- திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124—

கிளைக் காசநோய் மருத்துவமனை

*4898—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் அச்சங்குட்டம் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பீடிசுற்றும் தொழிலாளர்கள் நிறைய பேர் வாழ்வதால், இப் பகுதியில் கிளைக் காசநோய் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியாக கிளைக் காசநோய் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த அச்சங் குட்டம் கிராமத்தைச் சுற்றி பல கிராமங்களில் பீடித் தொழி லாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் காச நோயினால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள் ஏராள மானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அச்சங்குட்டம் பகுதியில் காசநோய் மருத்துவமனையின் கிளை ஒன்றைத் தொடங்க வேண்டிய அவசியம் இருப்பதனால் நீங்கள் அதனை மறுபரி சீலனை செய்து, அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் இப்போது 30 படுக்கை கள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கே நான்கு மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். இப் போது அங்கேயே கூட புற நோயாளிகளாக இருந்து, அவர்கள் மருத்துவம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்போது இருக்கிற முறைப்படி, காச நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வெளியிலே புற நோயாளிகளாகவே வந்து மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு முழுவதுமான வாய்ப்பு இருக்கிறது. அதுவு மல்லாமல், நாகர்கோவிலில் 400 படுக்கைகளோடு கூடிய மிகப்

[1992 மார்ச் 9

பெரிய ஒரு மருத்துவமனை இருக்கிறது. அதோடு தென்காசியிலே அதற்கென்று தனியாக ஒரு மையம் இருக்கிறது. எனவே சுற்றிச்சுற்றி இவ்வளவு வசதிகள் இருக்கின்ற காரணத்தினால், தனியாக அங்கே ஒன்று துவக்க வேண்டிய அவசியமில்லை இருக்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே அவர்கள் மருத்துவம் பெறுவதற்கு வசதிகள் இருக்கின்றன.

முற்பகல் 10-00

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற மருத்துவமனைகளிலேயே ஏராளமான வசதிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆலங்குளத்திலே பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று இருக்கிறது. அங்கே காசநோய்களுக்குரிய மருந்துகள் இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. அவற்றை வெளியிலேயிருந்து வாங்கிக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. அதனால் அங்கே இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்த ஆஸ்பத்திரிக்கு உரிய மருந்துகளை சப்ளை செய்வதோடு, ஏற்கெனவே அங்கே காச நோய் ஆஸ்பத்திரி கட்டுவதற்காக இதற்கு முன்னால் தீர்மானிக்கப்பட்டு, அது தொழிலாளர் நலத்துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும்கூட நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை மறுபடியும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 6 மாத காலத்திலே அங்கே காச நோய்க்கென வந்தவர்கள் 121 பேர்கள் என்று எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மருந்துகளைப் பொறுத்தவரையில் இல்லை என்ற பிரச்சினை இடையிலே ஏற்பட்டது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 6 கோடி ரூபாயை இடைக்காலத்திலே கூடுதலாக ஒதுக்கிக் கொடுத்ததன் காரணத்தால் தேவையான மருந்துகள் எல்லா இடத்திற்கும் வாங்கி கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காச நோய் சம்பந்தப்பட்ட தேவையான மருந்துகள் அந்த மருத்துவமனைகளிலே கிடைப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்யலாம். ஆகவே அதற்கென்று தனியாக ஒரு ஆஸ்பத்திரி தேவையில்லை. 121 பேர்கள்தான் இந்த நோயாளிகள் அங்கே வந்திருக்கிறார்கள். எனவே அந்த வகையிலே அவசியம் ஏற்படாது என்ற காரணத்தால்தான் அந்த மருத்துவமனையிலேயே இந்த மருத்துவத்தையும் பெறுவதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்தலாம். அதிகமான தீவிர சிகிச்சை தேவை எனப்படுபவர்களுக்கு பக்கத்தில் உள்ள தென்காசிக்கோ அல்லது நாகர்கோவிலுக்கோ அனுப்புவதற்கான ஏற்பாட்டை நாம் செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன்.

1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி. இது ஆலங்குளம் பற்றியது.

திருமதி ரமணி நல்லதம்பி : தலைவர் அவர்களே, பீடிச் சுற்றும் தொழிலைச் செய்கிறவர்கள் 7 வயதிலிருந்தே அந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். வறண்ட பகுதிகளிலே வாழ்கின்ற பெண்பிள்ளைகள் இதிலே அதிகமாக ஈடுபடுகின்ற காரணத்தாலே ஒரு சில ஆண்டுகளிலேயே இந்த நோய்க்கு அவர்கள் ஆளாகின்ற ஒரு வாய்ப்பு, நெல்லை மாவட்டம் போன்ற இடங்களில் பரவலாக காணப்படுகிறது. என்னுடைய தொகுதியிலேயும் அவ்வாறு நிலைமை இருக்கிறது. ஆகவே மொபைல் காச நோய் மருத்துவ மனை ஒன்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொபைல் காச நோய் மருத்துவமனை எந்த அளவிற்குச் சிறப்பாக இயங்கும் என்பதை நம்மால் சொல்ல முடியாது. ஆங்காங்கே தேவையான அளவிற்கு இப்போது மருத்துவ மனைகள் இருகின்றன. எனவே அங்கேயே போய் எல்லா மருத்துவ வசதிகளையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் மொபைல் என்று போட்டால் அவர்கள் அங்கே போகிறார்களா இல்லையா என்பது தெரியாது. இப்போது இருக்கிற மருத்துவமனைகளிலேயே வருகிறார்களா என்பதை கண்காணிப்பது மிகக் கடினமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட யோசனை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன். மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்,

125—

மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து

*3475 திரு. எம் எம். எஸ். அபுல்ஹசன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து ஒன்று திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தால் விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து விடப்படும் ?